2023 அக்டோபர் 11]

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அந்தக் குளத்தை மீண்டும் எங்களது சுற்றுலாத் துறை அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து சாத்தியக்கூறுகள் இருந்தால் நிச்சயமாக அவருடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

227—

பேருந்து வசதி

***37927—திரு. வி.பி. நாகைமாலி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினத்திலிருந்து கீழையூர் வரை நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகப்பட்டினத்திலிருந்து கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் வரை புதிய நகரப் பேருந்தை இயக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். கேள்வி எல்லாம் முன் வரிசையிலே திரு. வி.பி. நாகைமாலிக்கு ஆதரவாகக் கேட்கிறீர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினத்திலிருந்து கீழையூர் வரை நகரப் பேருந்தை இயக்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக்கூட ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். போக்குவரத்துத் துறை அதிகாரிகளுக்கும் ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். ஆகவே, நீங்கள் நாகப்பட்டினத்திலிருந்து கீழையூர் வரை ஒரு நகரப் பேருந்து இயக்க வேண்டுமென்று தொகுதி மக்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. நாகைமாலி அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, ஏற்கெனவே நாகப்பட்டினம்–மேலபிடாகை–ஒரத்தூர்–சிக்கல் வழியாக பேருந்து வழித்தடம் 4 கிலோ மீட்டர் வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. அதேபோல, நாகப்பட்டினத்திலிருந்து எட்டுக்குடி வழித்தடத்தில் ஏ13 என்ற பேருந்து தினசரி 5 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், நாகப்பட்டினம்–சோழவித்தியாபுரம்–மேலபிடாகை வழித்தடத்தில் ஏ5 நகரப் பேருந்து தினசரி 5 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையான, நாகப்பட்டினத்திலிருந்து கீழையூருக்குச் செல்கின்ற அந்த வழித்தடத்தில் பகுதி, பகுதியாக பல்வேறு பேருந்துகள் இயங்குகின்றன. அதுமாத்திரமல்லாமல், நாகப்பட்டினத்திலிருந்து திருத்துறைப்பூண்டிக்குச் செல்கின்ற பிரதான வழித்தடத்தில் கீழையூர் அமைந்திருப்பதால், அந்த வழியாக 20 நிமிடங்கள் இடைவெளியில் கழகப் பேருந்துகள் 73 நடைகளும், தனியார் பேருந்துகள் 25 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பேருந்துகள் வசதியே அந்தப் பகுதி மக்களுக்குப் போதுமானதாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதனைக் கவனத்தில்கொள்ள அன்போடு வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கூறுவது அனைத்தும் உண்மைதான். இருந்தாலும்கூட, அந்த வழித்தடத்தில் காலை, மாலை ஆகிய இரு வேளைகளில் நெரிசல்மிக்க முறையிலே பயணிகள் பயணம் செய்கிறார்கள். பள்ளிக்கூடத்திற்கு வரக்கூடியவர்கள், கல்லூரிக்கு வரக்கூடியவர்கள், மற்ற பணிக்காக வரக்கூடியவர்கள் எல்லாம் போக்குவரத்து நெரிசலினால் மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும், கீழையூர், ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைநகராகவும்*

இருக்கிறது. அங்கு பல்வேறு அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொண்டு, நாகப்பட்டினத்திலிருந்து கீழையூருக்கு ஒரு நகரப் பேருந்தை இயக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. நாகைமாலி அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, நாகப்பட்டினத்திலிருந்து கூத்தங்குடி-கிள்ளுக்குடி வழியாக ஆத்தங்குடி வரை ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. அதேபோல, திருவாரூர் முதல் கீழ்வேளூர் வழியாக வடகரை வரை ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. நாகப்பட்டினத்திலிருந்து கீழையூர் வரை புதிதாக நகரப் பேருந்து இயக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகிறார்கள். எனவே, இதனையும் கருத்தில்கொண்டு, மீண்டும் ஆய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.

டாக்டர் நா. எழிலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட மாடல் முதல்வர் அவர்கள் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது உருவாக்கிய பேருந்து வழித்தடம் எண் 41. அதனை மறுபடியும் அப்பாசாமி தெரு வழியாக இயக்கவும், பேருந்து வழித்தடம் எண் 10A-ஐ நுங்கம்பாக்கம் புஷ்பா நகர் வழியாக இயக்கவும் மற்றும் பேருந்து வழித்தடம் எண் 27B-ஐ ஹாரிங்டன் சாலை வழியாக இயக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்குதான் நமக்கெல்லாம் ஒளி

தந்த தொகுதி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, உரிய துறை அதிகாரிகளுடைய பரிசீலனையோடு மீண்டும் மேற்குறிப்பிட்ட வழித்தடத்தில் பேருந்துகளை இயக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் செல்கின்ற வழி 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அந்த மருத்துவமனைக்குக் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 2,000-லிருந்து 2,500 நோயாளிகள் வரை வந்து செல்கின்றார்கள். அதேபோல, கிட்டத்தட்ட 5,000, 6,000, 8,000 பேர் அந்தப் பகுதியிலே வந்து செல்வதால் அங்கு போக்குவரத்து நெரிசல் நிறைய இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் புதிய பேருந்து, சிற்றுந்து அதாவது, மினி பேருந்து இயக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், புதிய அரசு கலைக் கல்லூரி 3 கிலோ மீட்டர் தொலைவில் கட்டப்பட்டுள்ளது. அந்தக் கல்லூரி இப்போது திறக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. அங்கும் இதுவரை பேருந்துகள் விடப்படவில்லை. அந்தப் பகுதிக்கும் புதிதாக பேருந்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் மிகப் பெரிய அவதிக்குள்ளாகிறார்கள். அந்த மருத்துவமனைக்கு ஆட்டோவில் சென்று வர வேண்டுமென்றால், ரூ.300/– கொடுத்தால்தான் வருகிறார்கள். இதனால் பெரிய சிக்கல் ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், பேருந்து விட வேண்டும் அவ்வளவுதானே!

திரு. மா. செந்தில்குமார்: பேருந்து விட வேண்டும். எங்களுடைய மாவட்ட பொறுப்பு அமைச்சர் அவர்களும் இதனைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புதிய அரசுக் கலைக் கல்லூரி கட்டி முடிக்கப்பட்டு, திறக்கப்படும்போது அந்தப் பகுதிக்கு பேருந்து

2023 அக்டோபர் 11]

இயக்க வேண்டும் அல்லவா! மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்கள் ஏற்கெனவே அங்கு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்கப்பட்டது குறித்தும், அதேபோல மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு வந்து செல்வதற்கு ஏதுவாக பேருந்து வசதிகள் தேவை என்பது குறித்தும், புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்ற தாலுகாவான வானாபுரம் பகுதிக்கு பேருந்து வசதிகள் தேவை என்றெல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், திரு. வசந்தம் கார்த்திகேயன், மாவட்டச் செயலாளர் அவர்களும் இதுகுறித்து வலியுறுத்தியிருக்கிறார்கள். எனவே, உரிய ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்; கேள்வி இருந்தால் கேளுங்கள்.*

திரு. எஸ். காந்திராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா பெருந்தொற்று காரணமாக, அப்போது தமிழ்நாடு முழுவதும் பேருந்துகள் நிறுத்தப்பட்டன. அதற்குப் பின்னால், பெருந்தொற்று முடிவுற்று, மீண்டும் நகரப் பேருந்துகளும்,* mofussil bus*–களும் இயக்கப்பட்டன; பல நகரப் பேருந்துகள் இன்னும் இயக்கப்படாமல் இருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொத்தாம் பொதுவாக வேண்டாம். எந்த இடத்திற்கு புதியதாக பேருந்துகள் வேண்டுமோ அங்கே கேளுங்கள்.

திரு. எஸ். காந்திராஜன்: *என்னுடைய வேடசந்தூர் தொகுதியில், குறிப்பாக, கொம்பேரிபட்டி மலைப் பகுதிக்கு ஒரே ஒரு அரசுப் பேருந்துதான் போகிறது, தனியார் பேருந்துகள் எதுவும் செல்வதில்லை. அதேபோல, நாகக்கோணனூர் என்கிற*

ஊருக்கும் ஒரே ஒரு அரசு பேருந்துதான் போகிறது. இந்த இரண்டு வழித்தடங்களிலும், கிட்டத்தட்ட 4 கிலோ மீட்டருக்குள் உள்ள பள்ளிக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு மிகுந்த சிரமப்படுகின்றார்கள். எனவே, அந்தப் பேருந்துகளையெல்லாம் மீண்டும் இயக்குவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் இரண்டு முறை நேரில் கோரிக்கை வைத்தேன். அவரும் உரிய அதிகாரியிடம் அறிவுறுத்தி இருந்தாலும்கூட அந்தப் பேருந்துகள் பகுதி நேரமாக இன்னும் இயக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் இயக்குவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நான் ஏற்கெனவே பதில் அளித்திருக்கின்றேன். கடந்த ஆட்சிக் காலத்தில் கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகள், கொரோனாவால் நிறுத்தப்படவில்லை. போதிய ஓட்டுநர்கள், நடத்துனர்கள் இல்லாத காரணத்தினால்தான் 2,000 வழித்தடங்களில் பேருந்துகளை நிறுத்தினார்கள். மிகக் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், கடந்த 5 ஆண்டுக் காலத்தில் ஒரு புதிய ஓட்டுநர், நடத்துனர்கூட பணி நியமனம் செய்யப்படாத காரணத்தினால் அந்தப் பேருந்துகள் எல்லாம் நிறுத்தப்பட்டன. இப்போது புதிய ஓட்டுநர்கள், நடத்துனர்களை பணி நியமனம் செய்வதற்கான பணி தொடங்கப்பட்டிருக்கிறது. முதற்கட்டமாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திலே 685 பேரை தேர்வு செய்வதற்கு மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அடுத்தகட்டமாக, தேர்வுகள் நடைபெறவுள்ளன. தேர்வுகள் முடிந்தபிறகு அவர்கள் பணிக்கு வருவார்கள். அதேபோல, மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும், அடுத்தகட்டமாக பணி நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, அவை முடிந்தவுடன், ஏற்கெனவே நிறுத்தப்பட்ட வழித்தடங்களில் எவை முக்கியமானவையோ அந்த வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகளை இயக்கி நடைமுறைக்குக் கொண்டு வரப்போகின்றோம்.

அதேபோல, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்காக புதியதாக கூடுதல் பேருந்து வசதிகளைக் கேட்டிருக்கின்றார்கள். பள்ளிகள்,

2023 அக்டோபர் 11]

கல்லூரிகள் உள்ள பகுதிகளுக்கு தேவையான பேருந்து வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கின்றார்கள். அதிலும், மிகக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மிக முக்கியமான திட்டமான புதுமைப் பெண் திட்டத்திற்குப் பிறகு, அரசுப் பள்ளிகளில் படித்து முடித்து, கல்லூரிப் படிப்பு படிக்கும்போது, மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அரசின் உதவித் தொகை கிடைக்குமென்ற காரணத்தினால், அரசுப் பள்ளிகளில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை கூடுதலாகிக் கொண்டிருக்கிறது. எனவே, தற்போது பேருந்துகளின் எண்ணிக்கை, கூடுதலாகத் தேவைப்படுகின்ற வழித்தடங்களை ஆய்வு செய்து பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வழித்தடங்களை எழுத்துப்பூர்வமாக அளிக்கின்றபோது, அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏராளமான மினி பேருந்துகளுக்கு* permit *பெறப்பட்டு இயங்கிக் கொண்டிருந்தன. சிறிய கிராமங்களில் அந்த மினி பேருந்துகளைத்தான் ஓட்ட முடியும். தற்போது அந்த மினி பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளில் புதிய பேருந்துகளை இயக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினி பேருந்துகள் என்பது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த திட்டம். அதைக் கொண்டு வந்ததற்குப் பிறகு, அந்தப் பேருந்துகளில் கட்டண உயர்வு இல்லாமல் இருக்கின்றது என்கிற காரணத்தினால்,*

அதன் உரிமையாளர்கள் சில வழித்தடங்களில், சில நேரங்களில் பேருந்துகளை இயக்காமல் இருக்கும் சூழல் இருக்கிறது. அதுகுறித்து அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டு, ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும். அதைப்போல, புதிய பேருந்துகள் விரைவில் வரவிருக்கின்றன. அந்தப் புதிய பேருந்துகள் வருகின்றபோது, புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.*

திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட பீஞ்சமந்தை மலைக் கிராமத்திற்கு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இதுவரை இல்லாமலிருந்த சாலையை அமைத்துத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த பீஞ்சமந்தை மலைக் கிராமத்தில் சற்றேறக்குறைய, 20 ஆயிரத்திற்கும் அதிகமான அளவில் மக்கள் வசிக்கின்றார்கள். அந்த மலைக் கிராமத்திற்கு சாலை போட்டவுடன், பேருந்தை இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தபோது,* test drive *செய்தார்கள். பெரிய பேருந்துகள் அந்த வளைவுப் பாதைகளில் செல்ல முடியவில்லை. ஆகவே, அந்த மலைக் கிராமத்தில் வசிக்கும் 20 ஆயிரம் பேரின் நலனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசு, இதுவரை சாலையில்லாத அந்தக் கிராமத்திற்கு எப்படி சாலை அமைத்துத் தந்தார்களோ, அதேபோல், அந்தக் கிராமத்திற்கு மினி பேருந்து வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்களுடைய தொகுதியான அணைக்கட்டு பகுதியிலே, வேலூர் நாடாளுமன்ற இடைத்தேர்தலின்போது பீஞ்சமந்தைப்

பகுதியில்தான் பணியாற்றினோம். அங்கே சாலை வசதியும், பேருந்து வசதியும் அவசியம் என்பதை அப்போதே உணர்ந்திருக்கின்றோம். இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருணையோடு அங்கே சாலை வசதி அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, வழக்கமாக ஓடுகின்ற பேருந்துகளை அங்கே இயக்கமுடியாது. Short wheel base என்ற குறுகிய அடித்தளச் சட்டமுள்ள பேருந்துகளைத்தான் இயக்கமுடியும். அந்தப் பேருந்துகள் தற்போது கைவசம் இல்லை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது, வத்தல்மலையில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் பேருந்து வசதி கேட்டு மக்கள் கோரிக்கை வைத்தார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேருந்து வசதி இல்லாத பகுதிகளில் பேருந்து இயக்குவதற்கு உத்தரவிட்டு, அங்கே பேருந்து இயக்கப்பட்டிருக்கிறது. அதேபோல வருங்காலங்களில் புதிய பேருந்துகள் வந்தவுடன் அவருடைய பகுதிக்கும் பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

228—

தங்கும் விடுதி

***15590—திரு. வே. சம்பத்குமார்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீர்த்தமலை அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்த்தகிரி மலை என்பது 365 படிகளைக் கொண்டது. அந்த மலைக்கு கடந்த 14–9–2023 அன்று நேரடியாக ஆய்விற்குச் சென்றிருந்தேன். இந்தப் பகுதி என்பது வனச் சரகத்திற்குட்பட்ட,